# மூவொரு இறைவன் பெருவிழா

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-05-30

***இன்றைய வாசகங்கள்:***

*இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம்* 4: 32-34, 39-40 ,

*திபா* 33: 4-5. 6,9. 18-19. 20,22,

*திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 8: 14-17,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 28: 16-20

## *திருப்பலி முன்னுரை*

*அன்புக்குரியவர்களே,*

*மூவொரு இறைவன் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூன்று இறையாட்களும் இணைந்து ஒரே கடவுளாக செயல்படும் மறைபொருளுக்கு திருச்சபை இன்று விழா கொண்டாடுகிறது. இறைத்தந்தையின் மீட்புத்திட்டம் மண்ணுலகில் நிறைவேறுமாறு தூய ஆவியின் வல்லமையால் இறைமகன் மனிதரானார் என்ற உண்மையே கடவுளை முழுமையாக வெளிப்படுத்துகிறது. தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் மூவொரு இறைவனின் சாட்சிகளாக வாழும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***அப்பா, தந்தையே இறைவா,***

*உமது பிள்ளைகளாகிய இறைமக்களின் மேய்ப்பர்களாக விளங்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், மறைபொருளாகிய உமது பிரசன்னத்தை உணர்ந்தவர்களாய் வாழவும், மக்களை உமக்கு உகந்தவர்களாக உருவாக்கவும் அருள் புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***விண்ணக தந்தையே இறைவா,***

*இம்மண்ணகத்தில் வாழும் மாந்தர் அனைவரும், மூவொரு இறைவனாகிய நீரே உண்மை கடவுள் என்பதை அறிந்துகொள்ளவும், உமது பிள்ளைகளாக அன்பிலும், நீதியிலும் ஒற்றுமையிலும் வாழவும் உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வா க அரசரே இறைவா,***

*உமது உண்மையின் அரசைப் புறக்கணித்து, உலகைச் சார்ந்த எண்ணங்களிலும், தங் கள் சொந்த விருப்பங்களிலும் நாட்களை செலவிடும் எம் நாட்டு மக்கள் அனைவரும், மறுவுலக வாழ்வைப் பற்றிய*

*உண்மைகளை விரும்பித் தேடிட துணைபுரிய வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***ஒற்றுமை அருள்பவரே இறைவா,***

*உலகெங்கும் மதம், இனம், குலம், மொழி, பண்பாடு, பொருளாதாரம் என பல்வேறு காரணங்களால் பிரிந்து வாழும் மக்கள் அனைவரும், ஒரே கடவுளாகிய உமது பிள்ளை கள் என்ற உணர்வோடு ஒற்றுமையில் வளரத் தூண்டுதல் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***தொற்றுநோயால் சோர்ந்திருக்கும் எம் மக்களுக்காய்.....***

*விண்ணும் மண்ணும் அழிந்து போகும் என் வார்த்தைகள் ஒருபோதும் அழியாது என்று இயம்பிய எம் இறைவா! எம் மக்களை உமது வார்த்தையால் வளமை படுத்தி, தொற்றுநோயால் சோர்ந்துபோயிருக்கும் அவர்களுக்கு உமது வாக்கு அவர்களுக்குப் பாதுகாப்பாய் அமைந்திடும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***இரக்கமுள்ள எம் இறைவா!***

*உலகமெங்கும் துன்புறும் திருஅவையைக் கண்ணோக்கும். கோவிட் தொற்றுநோய் காரணமாக நாங்கள் அதிகமான அருள்பணியாளர்களையும், அருட்சகோதரிகளையும் இழந்துவிட நிலையில் மேலும் இந்நிலை தொடராமல் இருக்க உம்மை மன்றாடுகிறோம். அனைவருக்கும் அரணாகவும் கோட்டையாக இருந்து அவர்களை பாதுகாக்க தேவையான வரங்களை அருள வேண்டுகிறோம்.*

***நிலை வாழ்வு அளித்திடும் எம் இறைவா!***

*உம் குடும்பங்களில் கிறிஸ்துவில் மரித்த விசுவாசிகள் மற்றும் தொற்றுநோயால் மரித்த அனைவரும் நித்திய இளைப்பாற்றி அடையவும், உம் புனிதர்களில் திருக்கூட்டத்தில் அவர்களை இணைத்திடவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*